www.agaram.lk

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru In Collaboration with Provincial Department of Education Northern Province**

**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 12 (2021) | கிறிஸ்தவ நாகரிகம் | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

## பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்து.**

01. ஆரம்பகால மனிதன் ஒருவரோடொருவர் கூடி வாழும் முறையை அண்ணளவாக எக் காலத்தில் ஆரம்பித்தான்.
1) கி.மு 3000 ஆண்டுகள் 2) கி.மு 5000 ஆண்டுகள் 3) கி.மு 8000 ஆண்டுகள்
4) கி.மு 30000 ஆண்டுகள் 5) கி.மு 40000 ஆண்டுகள்

02. இயேசு கிறிஸ்துவின் வாழ்வுடன் தொடர்புடைய மூன்று இடங்களை உள்ளடக்கிய தொகுதி யாது?
1) யூதேயா, சுமேரியா, கலிலேயா 2) சுமேரியா, எருசலேம், கானா
3) சமாரியா, மொசப்பத்தேமியா, யூதேயா 4) கலிலேயா, நாசரேத், எருசலேம்
5) நாசரேத், பபிலோனியா, கானா

03. மீட்பு வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பரப்பளவில் மிகவும் சிறிய நாடாக கருதப்படுவது.
1) பாலஸ்தீனா 2) கலிலேயா 3) சமாரியா 4) எகிப்து 5) யூதேயா

04. இஸ்ரயேல் மக்களை யாரிடமிருந்து விடுவித்தமை சிம்சோனின் பிரதான பங்களிப்பாக கொள்ளப்படுகிறது?
1) ஏதோமியா 2) எகிப்தியர் 3) பிலிஸ்தியர்
4) பெனிசியர் 5) அசிரியர்

05. இஸ்ரேயேலின் நீதித்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பணி அல்லாதது.
1) சமூகத்தில் ஒழுங்கினை நிலைநாட்டல்.
2) எருசலேம் ஆலயத்திற்கு சென்று பாஸ்காவிழாவினை கொண்டாட ஊக்கமளித்தல்.
3) அந்நிய படையெடுப்புக்களிலிருந்து விடுவித்தல்.
4) முரண்பாடுகளை தீர்த்தல்.
5) உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக இருக்க ஊக்குவித்தல்.

06. தலைவனுக்கு ஆட்சி செய்யும் உரிமையை கடவுளே வழங்கியதாக நம்பப்பட்ட நாகரிகம்.
1) மொசப்தேமிய நகாரிகம் 2) எகிப்திய நாகரிகம் 3) உரோம நாகரிகம்
4) கிரேக்க நாகரிகம் 5) பபிலோனிய நாகரிகம்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

07. எருசலேம் நகர மதில் கட்டியெழுப்பப்பட்ட ஆண்டு.

1) கி.மு 444 2) கி.மு 922 3) கி.மு 356 4) கி.மு 539 5) கி.மு 597

08. இஸ்ரயேல் மன்னர் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A. ஆடுகளை மேய்பதிலும் யாழ் வாசிப்பதிலும் சிறந்தவன்.

B. பெலிஸ்திய தலைவனான கோலியாத்தை கொன்றவன்.

C. எருசலேமில் ஒரு ஆலயத்தை நிறுவியவன்.

D. இஸ்ரயேலின் பன்னிரு கோத்திரங்களையும் ஒன்று சேர்த்து ஒரு தனியரசை நிறுவியமை.

E. இறைவனிடம் ஞானத்தை வரமாக கேட்டவர்.

இவற்றுள் தாவீது மன்னன் பற்றிய சரியான கூற்று

1) ABC 2) ADE 3) ABD 4) BCD 5) CDE

09. எஸ்ரா, நெகேமியா சிறப்புற்றிருந்த காலம்.

1) தாவீது மன்னனின் ஆட்கிக்காலம் 2) சாலமோன் மன்னனின் ஆட்சிக்காலம்

3) அடிமை வாழ்வுக் காலம். 4) பாரசீகர்களின் ஆட்சிக்காலம்.

5) கிரேக்கர்களின் ஆட்சிக்காலம்

10. நீதிக்கும், நேர்மைக்கும் பெயர்போன இவர் ஏரோதின் குடும்பத்தின் தனிப்பிறவி என அழைக்கப்பட்ட மன்னன்?

1) அர்க்கெலா 2) தாவீது 3) பெரிய ஏரோது

4) ஏரோது அந்திப்பா 5) பிலிப்பு

11. பின்வருவோருள் ஒரே குழுவில் உள்ளடக்கப்பட முடியாதவர்கள்.

1) பரிசேயர்கள் 2) சதுசேயர்கள் 3) ஆளுனர்கள்

4) எசேனியர்கள் 5) மறைநூல் அறிஞர்கள்

12. தாவீது மன்னன் முடிசூட்டிக் கொண்ட இடம்.

1) யூதேயா 2) தாபோர்மலை 3) பெத்சாய்தா

4) எப்ரோன் 5) திபேரியா

13. கிரேக்க ஆட்சியில் பின்பற்றப்பட்ட சட்ட ஒழுங்கின் பெயர்.

1) தால்மூட் 2) மிஸ்னா 3) அல் - ஹா. அரஸ்

4) வுல்கத்தா 5) கொட்டேறியு

14. யூதேயாவிலுள்ள முக்கிய இடம் அல்லாதது.

1) எபிரோன் 2) எருசலேம் 3) பெத்லகேம்

4) எரிக்கோ 5) கானான்

15. உரோமைப் பேரரசிற்கு அடித்தளமிட்டார்.

1) பொம்பே 2) அலெக்சாண்டர் 3) ரோமூலஸ்

4) சைரஸ் 5) அரிஸ்ரோட்டில்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

16. எசீனியர் என்போர்
    1) தனியான வாழ்க்கை வாழ்ந்தனர்.
    2) தமது தலைவருக்கு கட்டுப்படாமல் வாழ்வோர்.
    3) உடமைகள் அனைத்தையும் தனியாக கொண்டிருந்தனர்.
    4) கி.பி 5ம் நூற்றாண்டளவில் வாழ்ந்தோர்.
    5) மாலைவரை மீண்டும் வேலை செய்து இரவு உணவில் பங்கேற்பர்.

17. ஸ்தொயிக்கம் எனும் கிரேக்க மெய்யியல் கொள்கையை தோற்றுவித்தவர்.
    1) தாமஸ்காஸ் 2) சீனோ 3) பிளேட்டோ
    4) அலெக்ஸ்சாண்டர் 5) அரிஸ்ரோட்டில்

18. இயேசுவின் காலத்து தொழுகைக்கூடம் கிரேக்க மொழியில் எவ்வாறு அழைக்கப்பட்டது.
    1) செபிக்கும் இடம் 2) ஆலயம் 3) சானகொக்
    4) கூடும் இடம் 5) ஒன்று கூடல்

19. பின்வருவனவற்றுள் பலஸ்தீனாவை ஆட்சி புரிந்த குறுநில மன்னனான ஏரோது அந்திப்பாஸ்சுடன் தொடர்புடைய கூற்று.
    A. இவர் கலிலேயாவிற்கும், பெரேயாவிற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.
    B. நீதிக்கும் நேர்மைக்கும் அன்பிற்கும் ஆதரவிற்கும் பேர் போனவர்.
    C. தந்தையின் தீய குணங்களை கொண்டிருந்தால் இயேசு இவரை “நரி” என்று குறிப்பிடுகின்றார்.
    D. இவர் லியன்னாவிற்கு நாடு கடத்தப்பட்டார்.
    E. இவர் கலிலேயாவின் மேற்குப் பகுதியில் திபேரியா என்ற பெரிய நகர் ஒன்றினைக் கட்டி எழுப்பினார்.
    1) A B C 2) B C D 3) C D E 4) A C E 5) A C D

20. யோர்தான் ஆறு சங்கமிக்கும் இடம்.
    1) யூதேயா 2) கரையோர சமவெளி 3) கலிலேயா
    4) எகிப்து 5) மேற்கு பள்ளத்தாக்கு

(20x1=20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

## பகுதி – II

❖ "அ" பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் "ஆ" பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்க.

### "அ" பகுதி

01. அ) நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்குமிடையே காணப்படும் ஒற்றுமை இரண்டு வேற்றுமை இரண்டு குறிப்பிடுக?
ஆ) மொசப்பத்தேமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்கள் 4 தருக.
இ) கிறிஸ்தவ நாகரிகத்தில் கிரேக்க நாகரிகம் ஏற்படுத்திய தாக்கம் 4 தருக.
ஈ) உரோமை நாகரிகத்தின் சிறப்பம்சங்கள் 4 தருக.
உ) பாலஸ்தீனாவின் மத்திய தரைக் கடற்கரைப் பகுதியில் காணப்படும் 4 சமவெளிகளையும் குறிப்பிடுக?
(5x4=20 புள்ளிகள்)

02. அ) இஸ்ரயேல் மக்களை ஆட்சி செய்த 4 அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
ஆ) இஸ்ரயேலரின் நீதித்தலைவர்களுக்கு இறைவனால் ஒப்படைக்கப்பட்ட முக்கியமான பணிகள் 4 குறிப்பிடுக?
இ) சாலமோன் மன்னனின் ஆட்சியின் சிறப்பு 4 தருக.
ஈ) அரிஸ்ரோட்டில் முன்வைத்த காரண காரிய கொள்கைகள் 4 இனைக் குறிப்பிடுக?
உ) இயேசுவின் காலத்தில் யூத சமுதாயத்தில் காணப்பட்ட சமயக்குழுக்கள் 4 இனை முன்வைக்க. (5x4=20 புள்ளிகள்)

03. அ) பலஸ்தீன சமுகத்தில் வாழ்ந்த பெண்கள் பிரிவினர் பற்றிய 4 கருத்துக்களை முன்வைக்குக.
ஆ) யூத தலைமைச்சங்கத்தின் விதிமுறைகள் 4 தருக.
இ) எகிப்தியரால் இஸ்ரயேல் மக்கள் மேல் சுமத்தப்பட்ட துன்பங்களை குறிப்பிடுக?
ஈ) இயேசுவின் காலத்தில் வரிதண்டுபவர்கள் பாவிகள் என அழைக்கப்பட்டமைக்கான காரணங்கள் 4 இனை குறிப்பிடுக?
உ) உரோமர்கள் கட்டிட கலையில் சிறந்து விளங்கினர் என்பதை எடுத்துக்காட்டும் 4 உதாரணம் தருக. (5x4=20 புள்ளிகள்)

agaram.lk

### "ஆ" பகுதி

04. அ) இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் சீனாய் மலையின் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக?
ஆ) இன்றைய காலத்தில் சில நாடுகள் உடன்படிக்கையை மீறுவதனால் ஏற்படும் விளைவுகளை ஆரர்ய்க. (2x10=20 புள்ளிகள்)

05. அ) உரோம சமூக அடிப்படையில் காணப்படும் இரண்டு பெரும் பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக?
ஆ) கிறிஸ்தவ மாணவர்களின் ஆன்மீக அறிவை வளர்க்கும் ஊடகமாக கிறிஸ்தவ நாகரிகம் அமைந்துள்ளமை பற்றிய உமது கருத்தை 20 வரிகளில் விளக்குக. (2x10=20 புள்ளிகள்)

06. அ) யூத சமூகத்தின் தாழ்ந்த சமூக மக்களை இயேசு மதித்தார் என்பதை உதாரணத்துடன் விளக்குக.
ஆ) இயேசு தாழ்ந்த மக்களை அன்பு செய்ததை போல நீர் பாடசாலையில் சக மாணவர்களை எவ்வாறு மதித்து நடப்பீர் என்பதை 20 வரிகளில் விளக்குக. (2x10=20 புள்ளிகள்)

07. அ) யூத மத நிறுவனங்களின் முக்கியத்துவம் பற்றி விளக்குக?
ஆ) உமது பங்கில் உள்ள சமய சமூக நிறுவனங்களின் செயற்பாட்டில் உமது பங்களிப்பை விளக்குக? (2x10=20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk